**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 114/2019</u>**

பெயர் : செந்தில் வேல் P.W.3. Cross

த/பெ. : ஜெயராமன்

தேதி : 20.11.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

தாவா சொத்தின் சர்வே எண், நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து வாதிக்கு எப்படி கிடைத்தது என்றால் 4ம் பிரதிவாதியிடம் 1ம் வாதி கார் ஓட்டிவந்ததால் அவருக்கு கொடுத்துவிட்டார். 4ம் பிரதிவாதி சிவக்குமார் என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றார். தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான உரிமை மூல ஆவணங்கள் வாதிகளிடம் இல்லை என்றாலும், அதனால் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றியும் வழக்கு சொத்து பற்றிய விபரங்கள் தெரியாததால் நான் ஆதாய சாட்சி என்றாலும், அதனால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியாததால் எனது சாட்சியம் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.